கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20.07.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

***தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பருத்திக்கான விலை முன்னறிவிப்பு- பருத்தியின் விலை பிரகாசிக்க வாய்ப்பில்லை***

உலகின் அதிக பருத்தி உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியாவும் முக்கியமான நாடாகும். நாட்டின், மொத்த இழைப் பயிர் நுகர்வில் கிட்டத்தட்ட 58 சதவீதம் பங்களிப்பை வழங்குவதன் மூலம் இந்தியாவில் ஜவுளித் தொழிலைபருத்தி நிலை நிறுத்துகிறது. இந்திய ஜவுளி அமைச்சகத்தின் படி, 2022-23 –ம் ஆண்டில் பருத்தி 130.61 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 343.47 இலட்சம் பேல்கள் (1பேல்=170 கிலோ) உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில், குஜராத், மகாராஷ்டிரா, தெலுங்கானா, ஹரியானா, மத்திய பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் பருத்தியை அதிகளவு உற்பத்தி செய்கின்றது.

பருத்தி 2022-23 –ம் ஆண்டில் 1.62 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 3.56 இலட்சம் பேல்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பெரம்பலூர், சேலம், தர்மபுரி, அரியலூர், திருச்சி, விருதுநகர், மதுரை மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் பருத்தி அதிகளவு பயிரிடப்படுகின்றது. மாநிலத்தில், பருத்தி இறவை மற்றும் மானாவாரி விவசாய முறையில் பயிரிடப்படுகின்றது. தென் மாவட்டங்களில் மானாவாரி விதைப்பு அக்டோபர் மாத ம் வரை நீடிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு கிடைத்த விலையின் அடிப்படையில் பருத்தி சாகுபடியை விவசாயிகள் இந்தியா முழுவதும் அதிக அளவில் பயிரிட்டனர். அதிக மகசூல் தரக்கூடிய , குறுகிய கால ரகங்களை தேர்வு செய்ததன் மூலம் அதிகபட்ச லாபம் ஈட்ட பருத்தி விவசாயிகள் முயன்றதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, நாட்டின் மேற்கு மண்டல மாநிலங்களில் பருத்தி சாகுபடி பரப்பு கணிசமாக அதிகரித்துள்ளது. நல்ல விலையை எதிர்பார்த்து பருத்தி விவசாயிகள் வைத்திருந்த கையிருப்பு சமீபத்திய சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் , தரமின்மை மற்றும் உபரி வரத்து காரணமாக பருத்தி விலை மேலும் சரிந்தது. கடந்த ஆண்டில் (2022) உணரப்பட்ட விலை உயர்வை கட்டுபடுத்த முன்னெச்சரிக்கையாக 1 0 இலட்சம் பேல்கள் பருத்தி இறக்குமதி செய்யப்ப ட்டது போன்றவற்றால், நடப்பு பருவத்தில் பருத்தியின் விலை உயர வாய்ப்பில்லை. எனவே , கோடைகால பாசன பருத்தியை விவசாயிகள் உடனடியாக விற்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு மற்றும் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலை க்கழகத்தில், தமிழ் நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இ யங்கி வரும், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மை யத்தின் விலை முன்னறிவுப்புத் திட்டம், கடந்த 26 ஆண்டுகளாக சேலம் பகுதியில் நிலவிய விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், பருத்தியின் சராசரி பண்ணை விலை அறுவடையின் போது குவிண்டாலுக்கு ரூ. 6500 முதல் ரூ. 6800 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மானாவாரி பருத்தியின் விதைப்பு முடிவுகளை அதற்கேற்ப மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்641003--
தொலை பேசி 04222431405

இயக்குனர் மற்றும் முனைஅதிகாரி
நீர்மற்றும் புவியியல் ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலை பேசி – 0422 –6611278

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
பருத்தி துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்641003
தொலை பேசி – 0422 –2456297

***மக்கள் தொடர்பு அலுவலர்***